பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 07 2024 **THURSDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இளநிலை நீட் தேர்வு முடிவுகளை நகரங்கள் மற்றும் தேர்வு மையங்கள் வாரியாக நாளை மறுநாள் பிற்பகலுக்குள் வெளியிட வேண்டும் என்று தேசிய தேர்வு முகமைக்கு, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2. போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. பத்திரப்பதிவுத்துறையில் நடப்பு நிதியாண்டில் இதுவரை 5 ஆயிரத்து தொள்ளாயிரத்து 20 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. நீலகிரி மாவட்டத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. **Swiss** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*<u>--இனி விரிவான செய்திகள்----</u>*

<<<<<>>>>>>

இளநிலை மருத்துவப்படிப்புகளுக்கான நீட் தேர்வு முடிவுகளை நகரங்கள் மற்றும் தேர்வு மையங்கள் வாரியாக நாளை மறுநாள் பிற்பகலுக்குள் வெளியிட வேண்டும் என்று தேசிய தேர்வு முகமைக்கு, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீட் முறைகேடு புகார் தொடர்பான மனுக்களை விசாரணை செய்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சந்திரசூட், திரு **Pardiwala,** திரு மனோஜ் மிஸ்ரா அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது. இவ்வழக்கின் விசாரணை திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார். இன்று புதுதில்லியில் இதுதொடர்பான உயர்நிலைக்குழு கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார். போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக இணை ஒருங்கிணைப்புக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். இதுவரை 12 லட்சம் கிலோ மதிப்பிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மேட்டுப்பாளையம் - தூத்துக்குடி இடையே வாரம் இருமுறை விரைவு ரயில் சேவையை மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் நாளை தொடங்கிவைக்கிறார்.

மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் இதற்கான விழா நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

பத்திரப்பதிவுத்துறையில் நடப்பு நிதியாண்டில் இதுவரை 5 ஆயிரத்து தொள்ளாயிரத்து 20 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

இது கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 821 கோடி ரூபாய் அதிகமாகும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தும் வகையில், அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகளை பதிவு செய்த அலுவலர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் மீது துறை ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழக அரசு எச்சரித்துள்ளது.

<<<<<>>>>>>

தமிழகத்தில் உள்ள நான்காயிரத்திற்கும் மேற்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு பெரியகருப்பன் கூறியுள்ளார்.

நபார்டு வங்கியின் நிறுவன தினத்தையொட்டி, இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை கணினி மயமாக்குவதற்கான நடவடிக்கைகளில் நபார்டு வங்கி ஆற்றிய பணி இன்றியமையாதது என்று அவர் குறிப்பிட்டார்.

கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்துவதிலும் நபார்டு வங்கி முக்கிய பங்கு வகிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மின்கட்டண உயர்வை திரும்பப்பெற வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்தியுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் திரு செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

இன்று திண்டுக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரி பிரச்சினையில் தமிழக விவசாயிகள் நலனை பாதிக்கும் வகையில் கர்நாடக அரசு செயல்படக்கூடாது என்று கூறினார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக கடைபிடிக்கப்படவில்லை என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

விழுப்புரத்தையடுத்த தைலாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள் கொலை செய்யப்படும் சம்பவம் தொடர்வதாகவும், இதனை தடுப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று திரு ராமதாசு வலியுறுத்தினார்.

<<<<<>>>>>>

சண்டிகர் - திப்ருகர் இடையேயான விரைவு ரயில் உத்தரப்பிரதேசத்தில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 2 பேர் உயிரிழந்தனர், 20 பேர் காயமடைந்தனர்.

**Gonda** அருகே பிற்பகல் இரண்டரை மணியளவில் நேரிட்ட இந்த விபத்தில் ஐந்து முதல், ஆறு பெட்டிகள் தடம் புரண்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

தேசிய பேரிடர் மீட்புப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். 40 பேர் கொண்ட மருத்துவக்குழுவும், 15 ஆம்புலன்ஸுகளும் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது. இந்த ரயில் விபத்தையடுத்து, அந்த வழித்தடத்தில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா இரண்டரை லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் நிதயுதவி வழங்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது. இந்த விபத்து குறித்து உயர்நிலைகுழு விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

நீலகிரி மாவட்டத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இதற்கிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று மாலை பரவலாக மழை பெய்தது.

இந்நிலையில், கர்நாடக அணைகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் காரணமாக, ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 35 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

அமராவதி அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட உள்ளதால், கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>>**

*மாவட்டச் செய்திகள்*

விழுப்புரம் மாவட்டத்தில் காலை உணவுத் திட்டத்தின்மூலம், 56 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்பெற்று வருவதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு பொன்முடி தெரிவித்துள்ளார்.

--------------

நீலகிரி மாவட்டம் இளித்தொரை கிராமத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை மாநில அமைச்சர் திரு ராமச்சந்திரன் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் அங்கன்வாடி மையத்தில் பணியின்போது உயரிழந்த வாரிசு தாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை ஆட்சியர் திரு பி என் ஶ்ரீதர் இன்று வழங்கினார்.

---------------

நாமக்கல் மாவட்டத்துக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட ஆட்சியர் திருமதி உமா, அவற்றின் மீது உடனுக்குடன் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

**<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

**Swiss** ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-4 என்ற செட் கணக்கில், யுக்ரைனின் **Denys Molchanov –** நெதர்லாந்தின் **Matwe Middelkoop** இணையை வென்றது.

------------------

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 4-6, 6-0 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Amelia Rajecki** –ஐ வென்றார்.

**<<<<<END>>>>>**